வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	பொருளியல்	புள்ளித்திட்டம்

பகுதி I

1) 5	11) 2	21) 4	31) 3	41) 3
2) 4	12) 4	22) 2	32) 2	42) 1
3) 3	13) 3	23) 1	33) 5	43) 4
4) 4	14) 5	24) 4	34) 5	44) 2
5) 1	15) 4	25) 5	35) 2	45) 1
6) 5	16) 3	26) 1	36) 4	46) 3
7) 5	17) 1	27) 3	37) 3	47) 1
8) 4	18) 3	28) 2	38) 5	48) 4
9) 1	19) 2	29) 4	39) 4	49) 2
10) 4	20) 5	30) 2	40) 5	50) 3

(50x2=100 புள்ளிகள்)

agaram.lk

பகுதி – II

01. **வள அருமை**

i) வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு வரையறையற்ற மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாத நிலை அருமை எனப்படும்.

தெரிவு

அருமையான வளங்களைப் பயன்படுத்தி சமூகமொன்று எத்தகைய பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பதனை தெரிவு குறிக்கும். தெரிவு பிரச்சினைக்குரிய காரணங்கள்.

- வள அருமை
- வள மாற்றுப்பயன்பாடு

(1 புள்ளி)

அமையச் செலவு

- மாற்றுத் தெரிவுகளில் ஒரு தெரிவினை மேற்கொள்ளும் போது இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் மெய் ரீதியான பெறுமதி அமையச் செலவு எனப்படும்.
- இது பணரீதியான எண்ணக்கருவல்ல.
- இது உள்ளார்ந்த எண்ணக்கருவாகும்.

(1 புள்ளி)

- வள அருமையும் மாற்றுப் பயன்பாடும் இணைந்து தெரிவுப் பிரச்சினையைத் தோற்றுவித்து தெரிவு அமையச் செலவினை ஏற்படுத்தும். அருமைத்தன்மை இல்லையெனில் அமையச் செலவு இல்லை.

(1 புள்ளி)

ii)

- நுகர்வோருக்கு நேர்க்கணிய பயனைத்தருகின்ற அனைத்தும் பண்டம் எனப்படும்.
  E.g :- ஆடைகள், கல்வி, சுகாதாரம் *(1 புள்ளி)*

  பண்டம் இரு வகைப்படும்.
  1) பொருளாதாரப் பண்டம் *2)* இலவசப் பண்டம் *(1 புள்ளி)*

பொருளாதாரப் பண்டம்
நிரம்பலில் அருமைத்தன்மையையும் உற்பத்தியில் அமையச் செலவினையும் கொண்ட பண்டங்களை பொருளாதாரப் பண்டம் என்பர்.
E.g :- கற்றல் உபகரணங்கள், ஆடைகள், மோட்டார் வாகனங்கள் *(1 புள்ளி)*

இலவசப் பண்டம்
எல்லையற்ற நிரம்பலையும் பூச்சிய அமையச் செலவையும் கொண்ட பண்டங்களினை இலவசப் பண்டம் என்பர்.
E.g :- சூரிய ஒளி, இயற்கைக் காற்று, இயற்கை மழை நீர் *(1 புள்ளி)*

iii) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்காக சமூகத்தினுள் வாழும் மக்கள் பிரிவினரால் உருவாக்கப்பட்ட நிறுவன ரீதியான செயல்திட்டம் பொருளாதார அமைப்பு எனப்படும். *(1 புள்ளி)*

நியமங்கள்
1) வளங்களின் (சாதனங்களின்) உரிமைத்தன்மை
2) தீர்மான தொடர்பாடல் பொறிமுறை
3) ஊக்குவிப்புக்களின் தன்மை
} *(3x1=3 புள்ளிகள்)*

agaram.lk

iv) இல்லை *(1 புள்ளி)*
வளங்களின் வினைத்திறன் பின்வரும் இரண்டு வினைத்திறனைக் கொண்டிருக்கும்.
1) உற்பத்தி வினைத்திறன்
- நிறைதொழில் மட்டம்
- பூரண உற்பத்தி

2) வள ஒதுக்கீட்டு வினைத்திறன்
$P = MC/MB = MC$ *(1 புள்ளி)*

- பொருளாதாரமொன்றில் சகல வளங்களையும் வினைத்திறனுள்ள வகையில் உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்துதலை **நிறைதொழில்மட்டம்** என்பர். *(1 புள்ளி)*

  இது உற்பத்தி வினைத்திறனை அடைந்து கொள்வதற்குரிய ஒரு நிபந்தனையாகும். பொருளாதார வினைத்திறனை வளங்கள் கொண்டிருப்பதற்கு உற்பத்தி வினைத்திறனையும் வள ஒதுக்கீட்டு வினைத்திறனையும் கொண்டிருக்க வேண்டும். *(1 புள்ளி)*

v) *அ)*

- உற்பத்தி சாதனங்கள் பூரண பதிலீட்டுத் தன்மையைக் கொண்டவையல்ல. *(1 புள்ளி)*
- அதிகரித்து செல்லும் அமையச் செலவினை வெளிப்படுத்தும். *(1 புள்ளி)*

ஆ) i)



(1 புள்ளி)

(பொருளாதார பின்னடைவு)

ii)



(1 புள்ளி)

(பொருளாதார வீழ்ச்சி)

02.

i) வருமான விளைவு

மற்றவைகள் மாறாத நிலையில் பொருளின் விலை மாற்றம் காரணமாக **நுகர்வோனின் மெய் வருமானத்தில்** ஏற்படும் மாற்றத்தினால் அப் பொருளின் கேள்வித்தொகை மாற்றமடைதல் வருமான விளைவு எனப்படும். (1 புள்ளி)

பதிலீட்டு விளைவு

மற்றவைகள் மாறாத நிலையில் பொருள் ஒன்றின் விலை மாற்றமடையும் போது சார்பு விலையில் மாற்றமேற்படும். அதனால் அப்பொருளின் கேள்வித்தொகை மாற்றமடைவதனை பதிலீட்டு விளைவு என்பர். (1 புள்ளி)

கேள்வி விதி

- மற்றவைகள் மாறாத நிலையில் பொருளின் விலைக்கும் அதன் கேள்வித்தொகைக்கு மிடையில் எதிரான தொடர்பு காணப்படுவதனை கேள்வி விதி என்பர்.
- சாதாரண பொருளொன்றைப் பொறுத்த மட்டில் அதன் விலைக்கும் நுகர்வோனின் மெய்வருமானத்திற்குமிடையில் எதிரான தொடர்பு இருப்பதனால் வருமான விளைவு கேள்வி விதியினை உருவாக்குகின்றது. (1 புள்ளி)
- பதிலீட்டு விளைவின் அடிப்படையில் சார்பு விலைக்கும் குறித்த பொருளின் கேள்வித் தொகைக்குமிடையில் எதிரான தொடர்பு இருப்பதனால் அதுவும் கேள்வி விதியினை உருவாக்குகின்றது. (1 புள்ளி)

	வருமான விளைவு	பதிலீட்டு விளைவு	
ii) இழிவுப் பண்டம்	எதிர்	எதிர்	
	(−)	(−)	(1 புள்ளி)
கிபன் பண்டம்	கூடுதலான எதிர்	எதிர்	
	(− −)	(−)	(1 புள்ளி)

- இழிவுப் பண்டத்திற்கு எதிர்க்கணிய பதிலீட்டு விளைவை விட எதிர்க்கணிய வருமான விளைவு சிறியதாகக் காணப்படும். (1 புள்ளி)
- கிபன் பண்டத்திற்கு எதிர்க்கணிய பதிலீட்டு விளைவை விட எதிர்க்கணிய வருமான விளைவு பெரிதாகக் காணப்படும். (1 புள்ளி)

iii) நெகிழ்ச்சியுள்ள கேள்வி

- மற்றவைகள் மாறாத நிலையில் பொருளொன்றின் விலைமாற்ற வீதத்தினை விட கேள்வித்தொகை மாற்ற வீதம் பெரிதாகக் காணப்படுவதனை நெகிழ்ச்சியுள்ள கேள்வி என்பர்.

(1 புள்ளி)

agaram.lk



(½ புள்ளி)

- இங்கு பொருளின் விலைக்கும் நுகர்வோன் செலவுக்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும். (½ புள்ளி)

நெகிழ்ச்சியற்ற கேள்வி

மற்றவைகள் மாறாத நிலையில் பொருளொன்றின் விலை மாற்றத்தினை விட கேள்வித்தொகை மாற்றம் சிறியதாகக் காணப்படல் நெகிழ்ச்சியற்ற கேள்வி எனப்படும்.

(1 புள்ளி)



- இங்கு பொருளின் விலைக்கும் நுகர்வோனின் செலவுக்குமிடையில் நேர்த்தொடர்பு காணப்படும.

(½ புள்ளி)

iv) *அ)*

P	Qd	
50	20	(1000 + 50)
75	16	(1200 ÷ 75)

agaram.lk

$$pEd = \frac{\Delta Qd}{\Delta P} \times \frac{P}{Qd}$$

ரூ 50 இல் $\Rightarrow \; = \frac{-4}{25} \times \frac{50}{20}$ ரூ 75 இல் $\Rightarrow \; = \frac{-4}{25} \times \frac{75}{16}$

$= -0.4$ *(1 புள்ளி)* $= {}^{-}0\ .75$ *(1 புள்ளி)*

ஆ) $AEd \; = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{\frac{P1+P2}{2}}{\frac{Q1+Q2}{2}}$

$= \frac{-4}{25} \times \frac{\frac{50+75}{2}}{\frac{20+16}{2}}$

$= \frac{-4}{25} \times \frac{62.5}{18}$

-0.56 *(1 புள்ளி)*

இ) x பண்டம் கேள்வி நெகிழ்ச்சியற்றது. *(1 புள்ளி)*

v) அ) **கேள்விச்சார்பின் நிலைமாற்று வடிவம்**

$$Qd = 200 - 5P$$
$$5P = 200 - Qd$$
$$\frac{5P = 200 - Qd}{-5}$$
$$\boxed{P = 40 - 0.2\,Qd}$$

(1 புள்ளி)

நிரம்பல் சார்பின் நிலைமாற்று வடிவம்

$$QS = -50 + 5P$$
$$\frac{-5P = -50 - Qs}{-5}$$
$$\boxed{P = 10 + 0.2\,QS}$$

(1 புள்ளி)

ஆ) $DP = SP$

$40 - 0.2Q = 10 + 0.2Q$

$40 - 10 = 0.2Q + 0.2Q$

$30 = 0.4Q$

$\frac{30}{0.4} = Q$

$75 = Q$

$P = 40 - 0.2 \times 75$

$P = 40 - 15$

$P = 25/=$

சமநிலை விலை = ரூபா 25

சமநிலைத்தொகை = 75 அலகுகள்.

$$CS = \frac{Mdp - Pm \times Qm}{2}$$
$$= \frac{40-25}{2} \times 75$$
$$= \frac{15}{2} \times 75$$
$= 562.5$ ரூபா

(1 புள்ளி)

$$PS = \frac{Pm - Msp}{2} \times Qm$$
$$= \frac{25-10}{2} \times 75$$
$$= \frac{15}{2} \times 75$$
$= 562.5$ ரூபா

(1 புள்ளி)



agaram.lk

03.

i)

விலை	வரிக்கு முன் நிரம்பல் தொகை	வரிக்கு பின் நிரம்பல் தொகை
1	20	− 20
3	40	0
5	60	20
7	80	40
9	100	60
11	120	80

(6x½ =3 புள்ளிகள்)

ii)

- கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாகக் காணப்படல். (1 புள்ளி)



(1 புள்ளி)

- நிரம்பல் நெகிழ்ச்சி பூச்சியமாகக் காணப்படும். (1 புள்ளி)



(1 புள்ளி)

iii)

$$Qd = Qs$$
$$800 - 4P = 100 + 6P$$
$$800 - 100 = 6P + 4P$$
$$700 = 10P$$
$$\frac{700}{10} = P$$
$$70 = P$$

$$Qd = 800 - 4 \times 70$$
$$= 800 - 280$$
$$= 520$$ அலகுகள்.

மானியத்திற்கு முன் சமநிலைவிலை = 70
மானியத்திற்கு முன் சமநிலை தொகை = 520 அலகுகள்.

மானியத்திற்கு பின்னரான நிரம்பல் சார்பு

$$QS_R = 100 + 6\,(P + 20)$$
$$= 100 + 6P + 120$$

$$\boxed{QS_R = 220 + 6P}$$

மானியத்திற்கு பின் சமநிலை விலை, தொகை

$$Qd = QS$$

$$800 - 4P = 220 + 6P$$
$$580 = 10P$$
$$\frac{580}{10} = P$$
$$58 = P$$

$$Qd = 800 - 4 \times 58$$
$$= 800 - 232$$
$= 568$ அலகுகள்

சமநிலை விலை = ரூபா 58
சமநிலை தொகை = 568 அலகுகள்

அ) நுகர்வோர் செலுத்தும் விலை = ரூ 58 (1 புள்ளி)
விற்பனையாளர் பெறும் விலை = ரூ 58+20
= 78 ரூபா (1 புள்ளி)

ஆ) $PS = \frac{MQS+QR}{2} \times SRP$
$= \frac{100+568}{2} \times 78$
$= 26\,052$ ரூபா

(2 புள்ளிகள்)



agaram.lk

இ) $N.W.L = \frac{R \times \Delta Q}{2}$
$= \frac{20 \times 48}{2}$
$= 480/=$

iv)

- கூப்பன் முறை
- வரிசை முறை
- இணைத்து வழங்கல் முறை
- கறுப்புச் சந்தை முறை
- இலஞ்ச முறை

(4x1=4 புள்ளிகள்)

v)

- நுகர்வோன் மிகை அதிகரிக்கும்.
- உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.

} பொருளாதார மிகை அதிகரிக்கும்.

- அரசிற்கு செலவு ஏற்படும்.
- தேறிய சமூக நலன் இழப்பு சிறியளவில் காணப்படும்.
- நுகர்வோனுக்கு குறைந்த விலையில் பண்டம் கிடைக்கும்.

(4x1=4 புள்ளிகள்)

04.

i) குறுங்கால உற்பத்தி சார்பு

தொழிநுட்பமும் இயலளவும் மாற்றமடையாது இருக்கையில் மாறும் உள்ளீடுகளினை மாற்றும் போது உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையில் நிலவுகின்ற தொடர்பினை **தொழிநுட்பரீதியாக** விளக்குதல் குறுங்கால உற்பத்திச்சார்பு எனப்படும்.

$$Q = f\ (L_1\ ,\ L_2\ , L_3\ ,\ \ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots Ln)$$

(2 புள்ளிகள்)

நீண்டகால உற்பத்திச்சார்பு

உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல உள்ளீடுகளினையும் மாற்றும் போது உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையில் நிலவுகின்ற தொடர்பினை தொழிநுட்ப ரீதியாக விளக்குதல் நீண்டகால உற்பத்திச்சார்பு எனப்படும்.

$$Q = f\ (L_1\ , L_2\ \ , L_3\ ,\ \ldots\ldots\ldots\ \ L_n\ , K_1\ , K_2\ , K_3 \ldots\ldots\ldots\ldots Kn)$$

(2 புள்ளிகள்)

ii) குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்று நிலையான காரணியுடன் மாறும் காரணியை சம அளவினால் அதிகரித்துச் செல்லும் போது மாறும் காரணியின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் ஒரு நிலைக்குப்பின் குறைந்து கொண்டு செல்வதனை குறைந்து செல்லும் விளைவு விதி என்பர்.

(2 புள்ளிகள்)

எடுகோள்கள்

- மாறும் காரணிகள் ஓரினத்தன்மையைக் கொண்டவை. *(1 புள்ளி)*
- தொழிநுட்பம் நிலையானது. *(1 புள்ளி)*

iii) சராசரி மொத்தச் செலவு (ATC)

ஓரலகு வெளியீட்டிற்குரிய செலவினை சராசரி மொத்தச் செலவு என்பர்.

$$ATC = \frac{TC}{Q}$$ *(1 புள்ளி)*

சராசரி மாறும் செலவு (AVC)

ஓரலகு வெளியீட்டிற்குரிய மாறும் செலவினை சராசரி மாறும் செலவு என்பர்.

$$AVC = \frac{TVC}{Q}$$ *(1 புள்ளி)*

- $ATC = AVC + AFC$
  $AFC = ATC - AVC$
  $AFC = \frac{TFC}{Q}$



(1 புள்ளி)

- நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும் போது மொத்த நிலையான செலவு எல்லா வெளியீட்டு மட்டத்திலும் ஒரேயளவாக இருப்பதனால் **சராசரி நிலையான செலவு வீழ்ச்சியடையும்.**

iv) சந்தை அமைப்புக்கள்

1. நிறைபோட்டிச் சந்தை.
2. தனியுரிமைச் சந்தை
3. தனியுரிமை போட்டிச்சந்தை
4. சிலருரிமை சந்தை.

(2 புள்ளிகள்)

செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1. சந்தையில் காணப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை.
2. பண்டங்களின் தன்மை
3. சந்தைக்குள் நிறுவனங்கள் உள்நுழைவதற்கும் வெளியேறுவதற்குமான சுகந்திரத்தன்மை.
4. சந்தையினுள் உற்பத்தி நிறுவனங்களிற்குமிடையில் காணப்படும் போட்டித்தன்மை.

(½ x4 =2 புள்ளிகள்)

v) ஆம்

$P \times Q = TR$

$70 \times 200 = \underline{14\ 000}$ (½ புள்ளி)

$TC = TFC + TVC$

$16\ 000 = 3\ 000 + \underline{13\ 000}$ (½ புள்ளி)

இத்தரவுகளின் படி நிறுவனத்தின் மொத்த மாறும் செலவு 13 000 ரூபாவாகும். மொத்த வருமானம் 14 000 ரூபாவாகும். இங்கு நிறுவனம் தன்னுடைய மொத்த வருமானத்தைப் பயன்படுத்தி மொத்த மாறும் செலவினை ஈடு செய்ய முடிவதனால் தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்கும். (2 புள்ளிகள்)

$TR - TC =$ இலாபம் / நட்டம்

$14\ 000 - 16\ 000 = -2\ 000$

- நட்டத்திலுள்ள நிறுவனமொன்று தன்னுடைய வருமானத்தின் மூலம் மாறும் செலவினை ஈடுசெய்வதனால் தொடர்ச்சியாகச் செயற்பட முடியும். (1 புள்ளி)

05.

i)

- உற்பத்திகள் மீதான மானியங்கள் நீங்கலான வரிகள்.
- போக்குவரத்துச் செலவுகள்
- வணிக விளிம்பு (இடைத்தரகர்களின் அறவீடுகள்)
- நுகர்வோன் செலுத்த வேண்டிய வரிகள்.

(4x1 =4 புள்ளிகள்)

ii) சொத்துக்களை உரிமை கொள்வது, பொறுப்புக்களை ஏற்றல், பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் ஏனைய நிறுவன அலகுடன் தொடர்புகளை பேணும் பொருளாதார அலகினை நிறுவன அலகு என்பர். (1 புள்ளி)

அதன் வகைகள்

1. நிதி நிறுவனமல்லாக் கூட்டுத்தாபனங்கள்
2. நிதிக் கூட்டுத்தாபனங்கள்.
3. அரசாங்கத்துறை
4. வீட்டுத்துறை
5. வீட்டுத்துறைக்கு சேவையை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்.

iii) மொத்த உள்நாட்டுச் செலவு = நுகர்வுச்செலவு + முதலீட்டுச் செலவு

(1 புள்ளி)

மொத்த தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டுச் செலவு + பொருள் சேவைகளின் தேறிய ஏற்றுமதி + வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம்.

(1 புள்ளி)

இலையிரண்டையும் வேறுபடுத்துவது

1. பொருள் சேவைகளின் தேறிய ஏற்றுமதி (1 புள்ளி)
2. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம். (1 புள்ளி)

iv) அ) $Y = C + I + G + NX$

$Y = 400 + 0.8(Y - NT) + 150 + 200 + (80)$

$Y = 400 + 0.8(Y - 50) + 150 + 200 + (80)$

$Y = 400 + 0.8Y - 40 + 150 + 200 + (80)$

$Y = 0.8Y + 630$

$0.2Y = 630$

$Y = \frac{630}{0.2}$

$Y = 3150$ பில்லியன் ரூபா

(2 புள்ளிகள்)

ஆ) $SG = NT - G$

$= 50 - 200$

$= -150\ BR$

(1 புள்ளி)

இ) $SP = Yd - C$

$= 3100 - 2880$

$= 220\ BR$ (1 புள்ளி)

$Yd = Y - NT$

$3100 = 3150 - 50$

$C = 400 + 0.8 \times 3100$

$= 2880\ BR$

$GDS = SP + SG$

$= 220 + (150)$

$= 70\ B.R$ (1 புள்ளி)

மாற்றீட்டு விடை

$GDS = I + NX$

$= 150 + (80)$

$= 70\ BR$ (2 புள்ளிகள்)

ஈ) $KI = \frac{1}{MPS}$

$= \frac{1}{0.2}$

$= 5$ (1 புள்ளி)

$KI = \frac{\Delta Y}{\Delta I}$

$\Delta Y = KI \times \Delta I$

$= 5 \times 50$

$= 250\ BR$ (1 புள்ளி)

உ) $KT = \frac{-MPC}{MPS}$

$= \frac{-0.8}{0.2}$

$= -4$ (1 புள்ளி)

agaram.lk

06. i)

- பொருள் சேவைகள், உற்பத்திக் காரணிகள் போன்றவற்றின் விற்பனை கொள்வனவின் போது பணம் இடைத்தரகராக தொழிற்படுவதனை பணத்தின் பரிமாற்றுத் தொழிற்பாடு என்பர்.

(1 புள்ளி)

- இத் தொழிற்பாட்டை பணம் ஆற்றுவதற்கு பொதுமக்கள் யாவராலும் ஏற்றுக் கொள்வதோடு நிறைவான திரவத்தன்மையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(1 புள்ளி)

முக்கியத்துவம்

1) கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையை இலகுபடுத்தியமை.
2) தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சியை ஊக்குவித்தமை.
3) பேரளவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியமை.
4) சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவித்தமை.

(2 புள்ளிகள்)

ii) ஒதுக்குப் பணம்

- ஒரு நாட்டின் பண நிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள நிதிச்சொத்துக்கள் ஒதுக்குப்பணம் எனப்படும். இதனுள் பின்வருவென உள்ளடங்கும்.
  1. பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயம்.
  2. வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்.
  3. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகுள்.

(1 புள்ளி)

பண நிரம்பல்

வருட இறுதியில் அரசு, வங்கிகள் தவிர பொதுமக்கள் வசமுள்ள நாணயமும் பொதுமக்களின் பெயரில் நிதிநிறுவனங்களிடமுள்ள வைப்புக்களினையும் உள்ளடக்கிய தொகை பண நிரம்பல் எனப்படும்.

(1 புள்ளி)

பணப் பெருக்கி

பண நிரம்பலுக்கும் ஒதுக்குப் பணத்திற்குமிடையிலான விகிதம் பணப்பெருக்கி எனப்படும்.

$$\text{பணப்பெருக்கி (Km)} = \frac{\text{பண நிரம்பல் (m)}}{\text{ஒதுக்குப் பணம் (H)}}$$

$$m = Km.H$$

மேலுள்ள சமன்பாட்டின் மூலம் தொடர்பை விளக்குதல் வேண்டும்.

(1 புள்ளிகள்)

iii) அமுக்க குழுக்களை இரண்டாக பிரித்து நோக்க முடியும்.

1. ஒழுங்கமைக்கப்பட்ட உழைப்பு

அதிக சம்பளம் வேண்டி மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களின் விளைவாக அதிகரிக்கப்படும் சம்பளத்தினால் உற்பத்திச் செலவு அதிகரிக்க மொத்த நிரம்பல் வீழ்ச்சியடைய பொது விலைமட்டம் அதிகரிக்கும். இதனால் சம்பளத்தினால் தூண்டப்பட்ட பணவீக்கம் ஏற்படும்.

(2 புள்ளிகள்)

2. சில உரிமைகளின் செயற்பாடுகள்.

சில உரிமை நிறுவனங்களின் செயற்பாடு காரணமாக இலாபத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக மூலப்பொருட்களின் விலையை அதிகரித்து உற்பத்திச் செலவை அதிகரிக்கும் போது மொத்த நிரம்பல் வீழ்ச்சியடைய பொது விலைமட்டம் அதிகரிக்கும். இதனை இலாபத்தினால் தூண்டப்பட்ட பணவீக்கம் என்பர்.

(2 புள்ளிகள்)

iv) உள்நாட்டு, வெளிநாட்டு, வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசாங்கம் ஆகிய பிரதான பொருளாதார அலகுகள தீர்மானங்களினைச் செயற்படுத்தும் நிதிச்சந்தைகள், நிதி நிறுவனங்கள், நிதிக் கருவிகள், நிதி உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் கண்காணிப்பு நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியது நிதி முறைமை எனப்படும்.

(2 புள்ளிகள்)

பிரிவுகள்

1. இலங்கை மத்திய வங்கி
2. இடைத்தரகு நிதி நிறுவனம்
3. நிதிச்சேவைகளினை வழங்கும் நிறுவனங்கள்
4. நிதி மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள்

(2 புள்ளிகள்)

மாற்றீடான விடை

1. வங்கித் தொழில்துறை நிறுவனங்கள்.
2. வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்.
3. சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்.
4. ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்.

(2 புள்ளிகள்)

v) அ) செயற்பாட்டு இலக்கு → சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம் (1 புள்ளி)
இடையீட்டு இலக்கு → விரிந்த பணம் நிரம்பல் (1 புள்ளி)

ஆ) வணிக வங்கி முறைமையில் காணப்படும் மிகை ஒதுக்கினைப் பயன்படுத்தி புதிதாக உருவாக்கக்கூடிய கடன்களின் அளவை வணிக வங்கிகளின் கடனாக்கம் என்பர்.

கடனாக்கம் = ஆரம்ப மிகை ஒதுக்கு X கடனாகப் பெருக்கி (1 புள்ளி)

எடுகோள்

- எல்லா வங்கிகளும் ஒரேயளவான காசு ஒதுக்கு வீதத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.
- எந்தவொரு வங்கியில் மிகை ஒதுக்கு இருப்பதில்லை. மிகை ஒதுக்கு முழுவதும் கடன்களாக வழங்கப்படும்.
- ஆரம்ப வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வங்கி முறைமையினுள் புதிதாக பணம் உள்வருதலோ வங்கி முறைமைக்கு வெளியே பண வெளியேற்றமோ நடைபெறுவதில்லை.
- சகல கடன் பெறுவோர்களும் தாம் பெற்ற கடன்பணம் முழுவதையும் வேறு வணிக வங்கியொன்றில் வைப்புச் செய்ய வேண்டும்.
- வங்கிகளிடம் கேள்வி வைப்புக்கள் மட்டுமே உள்ளன.

(1 புள்ளி)

07. i)

1. சந்தைப்பொறி முறையால் தோன்றும் வளப்பங்கீட்டின் வினைத்திறனின்மைய நீக்குதல்.
2. சந்தைப் பொறிமுறை திறனாக இயங்குவதற்குத் தேவையான சட்ட அடிப்படையையும் சமூகச் சூழலையும் உருவாக்குதல்.
3. வளப்பங்கீட்டில் நியாயத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.
4. பேரினப் பொருளாதார உறுதியைப் பேணல்.
5. பொருளாதார வளர்ச்சியை உயர்த்துதல்.

(4x1= 4 புள்ளிகள்)

ii)

- உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது தனியார் நன்மையை விட சமூக நன்மை பெரிதாகக் காணப்படும். சந்தை தனியார் நன்மைகளையும் தனியார் செலவினையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குவதனால் உத்தம வெளியீட்டு மட்டத்தினை விட சந்தையின் வெளியீடு குறைவானதாகக் காணப்படுவதனால் (குறை உற்பத்தி) வினைத்திறனற்ற வள ஒதுக்கீடு ஏற்படும்.

(1 புள்ளி)

agaram.lk



(1 புள்ளி)

- உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்பட்டால் தனியார் நன்மையை விட சமூக நன்மை சிறியதாகக் காணப்படும். இங்கு மிகை உற்பத்தி ஏற்படும்.



(1 புள்ளி)

agaram.lk

iii) வரியின் மிகைச்சுமை

வரியொன்று விதிக்கப்படும் போது சந்தையில் வீட்டுத்துறை மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் தீர்மானமெடுத்தல் செயன்முறை பிறழ்வுகளுக்குட்படுவதனால் வரியின் காரணமாக சுமக்க நேரிடும் பண ரீதியான வரிச்சுமைக்கு மேலதிகமாக மற்றுமொரு மேலதிக சுமையொன்று பொருளாதாரத்தின் மீது ஏற்படுமாயின் அது வரியின் மிகைச்சுமை எனப்படும்.
(2 புள்ளிகள்)

வரித்தாக்கம்

வரியொன்று அறவிடப்படும் போது இறுதி யார் அவ்வரிச் சுமையை ஏற்றுக்கொள்பவர் யார் என்பதனை திட்டவட்டமாக வெளிப்படுத்துதல் வரித்தாக்கம் எனப்படும்.
(1 புள்ளி)

இது இரண்டு விடயங்களினைக் கொண்டிருக்கும்.

1. சட்ட ரீதியான வரித்தாக்கம்
2. பொருளாதார ரீதியான வரித்தாக்கம். (1 புள்ளி)

iv)

- அரசாங்கம் தன்னுடைய நிர்வாக நடவடிக்கைகளினை மேற்கொள்ளப்படும் பொருட்டு மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும் செலவீனங்களினை அரசின் நடைமுறைச் செலவு என்பர். இதன் கீழ் 3 பிரிவுகள் உண்டு.

1. அரசின் பொருள் பணிகள் மீதான நடைமுறைச் செலவு
2. நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்
3. பொதுபடு கடனுக்குரிய வட்டிக்கொடுப்பனவுகள்.

(2 புள்ளிகள்)

நடைமுறைச் செலவு அதிகரிப்பதன் விளைவுகள்.

- அரச சேமிப்பு வீழ்ச்சியடையும்
- உள்நாட்டுச் சேமிப்பை குறைக்கும் அதனால் முதலீட்டு மட்டம் வீழ்ச்சியடையும்
- அரசின் மொத்தச் செலவினை அதிகரிக்கச் செய்து அரச பாதீட்டுப் பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்யும்.
- அரச கடன் சுமையைக் கூட்டும்.

(2 புள்ளிகள்)

v) அ) ஒதுக்கீட்டு மசோதா

எதிர்வருடத்திற்காக அரசாங்கம் மேற்கொள்ள எதிர்பார்க்கும் செலவீனங்கள். வரி அறவீடுகள் மற்றும் வருமானத்திற்கும் செலவுக்கும் இடையில் இடைவெளி காணப்படுமாயின் அதனை நிதியீட்டம் செய்யும் முறையையும் பாராளுமன்றத்தில் அனுமதியைப் பெறும் நோக்கில் சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தை ஒதுக்கீட்டு மசோதா என்பர்.

(1 புள்ளி)

கணக்கின் மீதான வாக்கெடுப்பு

யாதேனும் ஒரு விசேட காரணத்தினால் (யுத்த நிலைமை, தேர்தல்) எதிர்வரும் நிதியாண்டிற்காக சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாமற்போகுமிடத்து அது சமர்ப்பிக்கப்படும் வரையில் குறுகிய ஒரு காலப்பகுதிக்கு (மூன்று அல்லது நான்கு மாதம்) அரசாங்கத்தின் செலவீடுகளை ஈடு செய்யத் தேவையான நிதியினை கூட்டு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்டு பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணம் கணக்கு மீதான வாக்கெடுப்பு எனப்படும்.

ஆ) அரச பாதீட்டில் ஏற்படும் குறை நிலையினை ஈடுசெய்வதற்காக அரசாங்கம் கடன்களினைப் பெறுவதனால் அரசின் செலவீனங்களினை அதிகரிக்கச் செய்து அரச சேமிப்பில் வீழ்ச்சியினை உண்டாக்கும். அதனால் உள்நாட்டுச் சேமிப்பு குறைவடைய மெய்வட்டி வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும். அதிகரித்த மெய்வட்டிவீதம் முதலீட்டினை கவர்ச்சியற்றதாக்கம். அதனால் முதலீட்டு மட்டம் குறையும். எனவே அதிகரித்த அரச பாதீட்டுப் பற்றாக்குறை தனியார் முதலீட்டினை குறைக்கும் என்பதனை வெளித்தள்ளுகை விளைவு என்பர்.

(2 புள்ளிகள்)

08. i)

	நாடு A	நாடு B
அ) ஓரலகு X இற்கான அமையச்செலவு	$\frac{40}{50} = 0.8y$	$\frac{10}{25} = \boxed{0.4y}$
ஓரலகு Y இற்கான அமையச் செலவு	$\frac{50}{40} = \boxed{1.25\text{ x}}$	$\frac{25}{10} = 2.5\text{ x}$

(1 புள்ளி)

A நாடு :- Y பண்டத்தில் சிறப்புத்தேர்ச்சியடையும்.

B நாடு :- X பண்டத்தில் சிறப்புத் தேர்ச்சியடையும்.

(1 புள்ளி)

ஆ)

- ஓரலகு x இற்கான பரிமாற்று வீதம் 0.4y ஐ விட அதிகமாகவும் 0.8 y ஐ விட சிறியதாகவும் காணப்படல் வேண்டும்.

(1 புள்ளி)

- ஓரலகு y ற்கான பரிமாற்று வீதம் 1.25 x ஐ விட அதிகமாகவும் 2.5 x ஐ விட சிறியதாகவும் காணப்படல் வேண்டும்.

(1 புள்ளி)

ii) பெயரளவு பாதுகாப்பு வீதம் (NRP)

இறக்குமதி தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையினை அறவிடும் போது இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதத்தை பெயரளவு பாதுகாப்பு வீதம் என்பர்.

(1 புள்ளி)

$$NRP = \frac{\text{தீர்வையினால் உள்நாட்டு உற்பத்தியின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{தீர்வைக்கு முன்னுள்ள உள்நாட்டு உற்பத்தியின் சந்தைப் பெறுமதி.}} \times 100$$

செயற்படு பாதுகாப்பு வீதம் (ERP)

தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையை விதிப்பதனால் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதம் செயற்படு பாதுகாப்பு வீதம் என்பர்.

(1 புள்ளி)

$$ERP = \frac{\text{தீர்வையினால் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{தீர்வைக்கு முன் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி.}} \times 100$$

iii) ஒரு நாட்டின் ஏற்றுமதி வருமானத்தின் இறக்குமதியின் கொள்வனவு சக்தியை வருமான வர்த்தக மாற்று விகிதம் என்பர். இது பின்வருமாறு அளவிடப்படும்.

$$\text{வருமான வர்த்தக மாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச்சுட்டெண்} \times \text{ஏற்றுமதி தொகை சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச்சுட்டெண்}} \times 100$$

(1 புள்ளி)

இது அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகள்.

- ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்.
- இறக்குமதிகளின் சக்தி அதிகரிக்கும்.
- வர்த்தக மீதி முன்னேற்றமடையும்.
- பணவீக்கத் தாக்கம் ஏற்படும். (மொத்த கேள்வி அதிகரிப்பதால்)
- சென்மதி நிலுவை முன்னேற்றமடையும்.

(2x1= 2 புள்ளிகள்)

agaram.lk

iv)

- நடைமுறைக்கணக்கு மீதி = வர்த்தக மீதி + பணிகள் மீதி + முதனிலை வருமானக் கணக்கு மீதி + இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி
  $-2309 = -9619 + 7310$

(1 புள்ளி)

- இங்கு நடைமுறைக் கணக்கு மீதியையும் வர்த்தக மீதியையும் வேறுபடுத்துவது.
  1. பணிகள் மீதி
  2. முதனிலை வருமானக் கணக்கு மீதி
  3. இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி. *(1 புள்ளி)*

- மேலே தரப்பட்ட மூன்று கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை நேர்க்கணியமாகவும் வர்த்தக மீதியில் காணப்படும் குறையை விட சிறியதாகவும் காணப்படும்.

(1 புள்ளி)

அத் தொகை 7310 மில்லியன் டொலர்களாகும். *(1 புள்ளி)*

v) நெகிழ்வுள்ள நாணயமாற்று விதிமுறையின் கீழ் வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வி நிரம்பல்களில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் உள்நாட்டு சட்டப்பண அலகின் பெறுமதி வெளிநாட்டுப்பண அடிப்படையில் வீழ்ச்சியடைவதனை நாணயமாற்று வீத தேய்வு என்பர்.

(1 புள்ளி)

விளைவுகள்

1. இறக்குமதிகளின் உள்நாட்டு விலையை அதிகரிப்பதனால் இறக்குமதிகளின் செலவீனங்கள் கூடும்.
2. வெளிநாட்டுக்கடன் தவணைக் கொடுப்பனவு, வட்டிகொடுப்பனவுகள் அதிகரிக்கும்.
3. ஏற்றுமதிப் பண்டங்களிற்கான கேள்வி அதிகரித்து ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்.
4. சுற்றுலாத்துறையின் வருமானம் அதிகரிக்கும். அதனால் சென்மதி நிலுவையின் சேவைக் கணக்கு முன்னேற்றமடையும்.

(3 புள்ளிகள்)

09. i) குறிப்பிட்ட இருகால இடைவெளியில் மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பின் நூற்று வீதமே பொருளாதார வளர்ச்சி வீதமாகும். நேர்க்கணிய பொருளாதார வளர்ச்சி வீதமே விரும்பப்படும். நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மூலம் இது அளவிடப்படும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருட மெய் மொ.உ.உற்பத்தி} - \text{முந்திய வருட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{முந்திய வருட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

அதன் முக்கியத்துவங்கள் வருமாறு.

1. ஒரு நாட்டின் உற்பத்தி / வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிய உதவும்.
2. மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை அறிதல்.
3. நாட்டில் தனிநபர் உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தினை அறிதல்.
4. தேசிய உற்பத்தியின் இரட்டிப்புக் காலத்தை அறிய உதவும் (70 ÷ பொருளாதார வளர்ச்சி வீதம்)
5. அரசின் திட்டமிடலுக்கு அவசியமானது.
6. சர்வதேச ரீதியில் நாடுகளை ஒப்பீடு செய்வதற்கு உதவும்.

(3x1=3 புள்ளிகள்)

agaram.lk

ii)

1. அரச பாதீட்டு குறை நிலை உயர் மட்டத்தில் காணப்படுதல்.
2. அரசாங்கக் கடன் சுமை உயர்மட்டத்தில் உள்ளமை.
3. வர்த்தக நிலுவை குறை நிலை விரிவடைந்து செல்கின்றமை.
4. உள்நாட்டு சேமிப்புக்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.
5. உள்நாட்டு முதலீட்டு வீதம் குறைவாக இருத்தல்.
6. நல்லாட்சியில் உள்ள பலவீனம்
7. பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளில் திறன் விருத்தி போதாமை.
8. மனிதவள அபிவிருத்திக்கு வாய்ப்பான கல்விக்கொள்கை ஒன்று காணப்பட்டாமை.

(5x1=5 புள்ளிகள்)

iii) மானிட வறுமைச் சுட்டெண்.

- சுகாதாரமும் வாழ்க்கையும்.
  - ஆயுள் எதிர்பார்க்கை (40 வயதுக்கு முன் இறப்போர் வீதம் கவனத்தில் எடுக்கப்படும்)
- கல்வியறிவு
  - 3ம் நிலைக் கல்வியைப் பெறாதோர் வீதம் கவனத்தில் எடுக்கப்படும்.
- வாழ்க்கைத் தரம்
  - சுத்தமான குடிநீரைப் பெறமுடியாத மக்கள் வீதம்.
  - சுகாதார வளர்ச்சியைப் பெற முடியாத மக்கள் வீதம்.
  - ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளிடையே நிலவும் மந்த போசணை.

(3 புள்ளிகள்)

வறுமை இடைவெளிச் சுட்டெண்.

- வறியவர் ஒருவர் நுகர்வில் தோன்றும் வறுமையிலிருந்த வெளியேறுவதற்குத் தேவையான பணத்தின் அளவு (பற்றாக்குறையான பணத்தின் அளவு) வறுமை இடைவெளிச் சுட்டெண் என்பதனால் கருதப்படும்.

வறுமை இடைவெளிச் சுட்டெண் = $\frac{\text{மாதமொன்றிற்கு ஏற்படும் வறியவருக்கான நுகர்வுச் செலவு}}{\text{வறுமைக் கோட்டின் பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாடுகள்}}$

(2 புள்ளிகள்)

iv) வேலையின்மை என்பது பொருளாதார பிரதி பலன் ஒன்றை எதிர்பார்த்து ஏதாவது பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்கு விருப்பம் இருந்தும் அதற்குச் சந்தர்ப்பம் ஒன்று இல்லாதிருப்பதாகும்.

(1 புள்ளி)

இலங்கையில் வேலையின்மை தோன்றுவதற்கான காரணங்கள் வருமாறு.

- ஊழியர் சந்தைக்குப் பொருத்தமுடைய வகையில் ஊழியர்கள் உருவாகாதிருத்தல்.
- தொழிலுக்கு கேள்வியை ஏற்படுத்துபவர்களின் தகுதியும் இயலுமையும் ஊழியச் சந்தையின் தேவையுடன் பொருத்தாமை.
- தொழிலுக்கான கௌரவம், அங்கீகாரம் போன்ற காரணங்களால் தனியார் துறையின் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடாமல் அரசதுறை தொழில் வாய்ப்பு கிடைக்கும் வரை காத்திருத்தல்.
- ஊழியப்படையின் வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தமாக இடம் பெறுவதால் தொழில் உருவாக்கம் குறைவாக இருத்தல்.
- சட்டவரையறைகள் காரணமாக தனியார் உற்பத்தி நிறுவனங்களுக்குத் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வதில் வரையறைகள் காணப்படுதல்.

(4 புள்ளி)

agaram.lk

10. i)

- இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.
- இதனால் சமூகத்தின் கல்வி மட்டம், பயிற்சி மட்டம் என்பன குறைந்த மட்டத்தில் காணப்படும். இதனால் மனித மூலதன திரட்சி குறைவாக இருத்தல்.
- ஆராய்ச்சி, அபிவிருத்தி மீது மேற்கொள்ளும் செலவுகள் குறைவாக இருத்தல்.
- ஊழியர்களின் குறைந்த தேர்ச்சி மட்டமும் சம்பள மட்டமும்.
- கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடுகள் குறைவாக இருத்தல்.

(5 புள்ளிகள்)

ii) *1)* வறுமை இன்மை

2) பசியின்மை

3) நல்ல ஆரோக்கியம்

4) தரமான கல்வி

5) பாலினச் சமத்துவம்

(5x1=5 புள்ளிகள்)

iii) 1) இலங்கையை சுபீட்சம் மிக்க ஒரு நாடாக கட்டியெழுப்புதல்.
2) உயர் நடுத்தர வருமான நாடாக மாற்றுதல்.
3) அனைவருக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்தல்.
4) தொழில் வாய்ப்புக்களை வழங்குவதை உறுதிப்படுத்தல்.
5) அனைத்து பிரஜைகளுக்கும் உயர்ந்த வருமானத்தையும் சிறந்ததொரு வாழ்க்கை முறைக்குமான சூழலை ஏற்படுத்தல்.
6) அறிவை அடிப்படையாகக் கொண்ட மிகவும் போட்டி மிக்க சமூக சந்தைப் பொருளாதாரத்துடன் இலங்கை இந்துமா சமுத்திரப்பிராந்தியத்தின் கேந்திர மையமாக மாற்றப்படுதல்.
7) எண்ணிலக்க பொருளாதாரமாக மாறுதல். (Digital Economy)

(5x1=5 புள்ளிகள்)

iv) 1) செயற்திட்டங்கள் விரைவாக பூரணப்படுத்தப்படும்.
2) உட்கட்டுமானங்கள் தொடர்பாக சிறந்த தீர்மானங்களை எடுக்க உதவும்.
3) அரச தனியார் பங்குடமையின் முதலீட்டுமீதான வருமானம் அதிகரிக்கும்.
4) அரசாங்க வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறைக்கும்.
5) உயர்தர நியமங்கள் செயற்திட்டத்தின் வாழ்க்கை வட்டமூடாக சிறப்பாக பெறப்படுவதுடன் பேணவும் படுகின்றது.
6) தனியார் மயப்படுத்தலுக்கான பொதுமக்களின் எதிர்ப்பை தனிக்க உதவும்.

(5x1=5 புள்ளிகள்)

agaram.lk